**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.37/2021 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-2/PW- 2 | Village: |
| Name : சாமிநாதன் | Age :53 |
| Father's/Husband's Name : ராமமூர்த்தி | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10.07.2025**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி . அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜர்**

**<u>மனுவின்பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சண்டை நடந்த விவரம் முழுவதுமாக எனக்கு தெரியும் என்றால் சரிதான் . எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான் . என்னை எதிரிகள் இருவரும், கீர்த்தனா என்பவரும் கைகளால் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் . சண்டைக்கு என்ன காரணம் என்றால் வேலிப் பிரச்சனைதான் காரணம் . சண்டை முடிந்ததும் முதலில் எங்கு சென்றோம் என்றால் காவல் நிலையம் சென்றோம். புகார் அளித்தேனா என்றால் போலிசார் எங்களை மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தினார்கள் . முதலில் எந்த மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் முதலில் ஆடுதுறை மருத்துவமனைக்கும்

பின்னர் கும்பகோணம் மருத்துவமனைக்கும் இறுதியாக தஞ்சாவூர் மருத்துவமனைக்கும் சென்றோம். போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை . நான் என்னை தாக்கியதாக போலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். சண்டையை அக்கம் பக்கம் உள்ளவர்கள் பார்த்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சம்பவத்தின்போது நான் அங்கில்லை என்றாலும் மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு , கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- J. Jayganesh,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW-1 <br> Name : லதா <br> Father's/Husband's Name : சாமிநாதன் <br><br> Nationality : Indian | Village: <br> Age :47 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10.07.2025**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி . அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜர்**

**<u>மனுவின்பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் டிஎம்எல்டி படித்துள்ளேன் . என்னிடம் காட்டப்படும் அசாஆ 1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல . மேற்படி புகார் வாக்குமூலம் என்னிடம் பெறப்பட்ட வாக்குமூலம் இல்லை என்றால் சரிதான் . சம்பவம் ஆனது எப்போது நடந்தது என்றால் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் நடந்தது. உடனடியாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் திருநீலக்குடி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். நான் எப்போது புகார் அளித்தேன் என்றால் சம்பவ தினத்தன்று இரவு 9 லிருந்து 9.30 மணியிருக்கும். நான் திருநீலக்குடி மருத்துவமனைக்கு முதலில் சென்று அங்கிருந்து

ஆடுதுறை மருத்துவமனைக்கு சென்று பிறகுதான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன் என்றால் சரிதான் . எனது கணவர் மேற்படி 3 மருத்துவமனைகளுக்கும் காவல் நிலையத்திற்கும் என்னுடன் வந்தார் . நான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு 10 மணிக்கு மேல் 11 மணிக்குள் இருக்கும். நான் இவ்வழக்கில் கொடுக்கப்பட்ட உண்மையான புகார் வாக்குமூலம் மறைக்கப்பட்டு வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் நான் கொடுத்த வாக்குமூலத்தில் பாதி உள்ளது பாதிக்கு மேல் இல்லை. என் வீட்டிற்கு பக்கத்தில் 4 வீடுகள் உள்ளது. மேற்படி 4 வீட்டில் வசிப்பவர்கள் சண்டையை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள் . சம்பவத்தின் போது எனது கணவர் உடன் இருந்தாரா என்றால் எனது கணவர் இருந்தார் . வழக்கு சம்பவத்திற்கு என்ன காரணம் என்றால் முன்னாள் இருந்த வேலி பிரச்சனைதான் காரணம் . வேலி பிரச்சனை எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 15 ஆண்டுகளாக உள்ளது. எங்களுக்கும் எதிரிகளுக்கும் 15 ஆண்டுகளாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான் . மேற்படி விவரத்தை புகார் வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . சம்பவ தினத்தன்று நான் எதிரிகளின் மாட்டை பிடித்து கட்டினேன் என்றால் சரிதான் . அதை 2ம் எதிரி ரேவதி கேட்டபோது எங்கள் இருவருக்கும் சண்டை ஏற்பட்டு இருவரும் கட்டி பிடித்து கீழே உருண்டபோது எனக்கு உதட்டில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல . சம்பவத்தின்போது என்னுடன் எனது கணவர் இல்லை என்றால் சரியல்ல . நான் ஆஜர் எதிரிகள் இருவரின் மீதும் கீர்த்தனா என்பவரின் மீதும் புகார் அளித்தேன் . புகார் வாக்குமூலத்தை படித்து காட்டும்போது மேற்படி மூவரின் மீதும் புகார் அளிக்கப்பட்டதை உறுதி செய்து கொண்டுதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான் . போலிசார் விசாரணையிலும் சம்பவத்தில் 3 நபர்கள் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக எதிரிகள் மீதுள்ள விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு , கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**